# இலங்கையில் உபஉணவுப் பயிர்களுக்காக வணிக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் வசதிகள் பற்றிய ஓர் ஆய்வு 1965 — 1980

ந. பேரின்பநாதன்

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் உள்ள மக்களில் பெரும்பான்மையினர் விவசாயத்திலேயே ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தமது உற்பத்தியை அதிகரிப்பதற்குக் காணப்படும் பல்வேறு தடைகளில் நிதிப் பற்றாக்குறை என்பது முக்கியமானது. பல விவசாயிகள் கிராமத்தில் வட்டிக்குக் கடன் கொடுப்போரின் பிடியில் சிக்கி உள்ளனர். அண்மைக் காலத்தில் அவ்விவசாயிகளுக்கு நிதிவசதியினை அளித்து கிராமியக்கடன் கொடுப்போனின் பிடியில் இருந்து விவசாயியை விடுவிப்பதற்கு அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் அரசாங்கங்கள் நிறுவனரீதியாகக் கடன் வழங்கும் மூலாதார வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு வருகின்றன. இலங்கையும் 1960 ஆம் ஆண்டுக்குப்பின்னர் உள்நாட்டு விவசாயத்துறைக்குக் கடன் வழங்குவதற்குப் பல நிறுவனரீதியான கடன் வசதித்திட்டங்களை உருவாக்கி உள்ளது. அத்தகைய திட்டங்கள் மூலம் வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், அரசாங்கத்திணைக்களங்கள் ஊடாக நெல், மற்றும் உபஉணவுப் பயிர்களை உற்பத்தி செய்வோருக்குக் கடன்கள் வழங்கப்படுகின்றன.

அண்மைக்காலத்தில் இலங்கையில் நிறுவனரீதியான கடன் வசதித் தன்மைகள் பல்வேறு வகைகளில் அதிகரித்தபோதும் விவசாயிகளுக்கு வழங்கிய கடன்களைத் திரும்பப் பெறுவதில் வங்கிகள் பிரச்சினையை எதிர்நோக்குகின்றன. பல்வேறுவகையான காரணிகளால் விவசாயிகள் பெறுகின்ற கடன்களில் பெரும்பகுதி திரும்பச் செலுத்தப்படுவதில்லை என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இக்கட்டுரையானது இலங்கையில் உபஉணவுப்பயிர்களை உற்பத்தி செய்வோர் பெறும் கடன் வசதிகளைப் பற்றி ஆராய்கிறது. இக்கட்டுரை நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளது. முதலாவது பிரிவு இலங்கையின் உள்நாட்டு விவசாயத்துறையில் உபஉணவுப் பயிர்கள் பெறும் முக்கியத்துவம் பற்றிக் கூறுகின்றது. இரண்டாவது பிரிவு உபஉணவுப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வோர் பெறக்கூடிய கடன் வசதிகள்பற்றிக் குறிப்பாக இலங்கையின் நிறுவனரீதியான கடன் மூலாதாரங்களின் வளர்ச்சி பற்றி ஆராய்கிறது. மூன்றாவது பகுதி உபஉணவுப் பயிர்ச்செய்கைக்காக நிறுவன ரீதியான மூலாதாரங்களினால் வழங்கப்பட்ட கடன் பற்றியும் நான்காம் பகுதி விவசாயிகள் பெற்ற கடனில் திரும்பச் செலுத்தாத பகுதி பற்றியும் அதற்கான காரணங்கள் பற்றியும் ஆராய்கின்றது.

## பகுதி 1

இலங்கையின் விவசாயத்தினைத் தெளிவாக உள்நாட்டு விவசாயம், பெருந்தோட்ட விவசாயம் என இரு வகைப்படுத்தலாம். முதல், தொழி

லாளர், ஒழுங்கமைப்பு, உற்பத்தியின் நோக்கம், செய்யப்படும் பயிர்கள் போன்ற பல்வேறு விடயங்களைக் கொண்டு மேற்கூறிய இரு பிரிவுகளும் வேறுபடுத்தப்படுகின்றன. பெருந்தோட்ட விவசாயமானது அதிகளவு முதலீடு கொண்டதாகவும், ஒழுங்கான நிருவாக அமைப்புக் கொண்டதாகவும் நவீன உற்பத்தி முறைகளைக் கையாள்கின்ற துறையாகவும், ஏற்று மதி செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு இயங்குகின்ற துறையாகவும் காணப்படுகின்றது. மற்றும் அண்மையில் ஏற்படுத்தப்பட்ட நிலச் சீர்திருத்தத்தின் காரணமாக பெருந்தோட்ட நிலப்பரப்பில் கணிசமான அளவு பகுதி அரசாங்கத்தின் மேற்பார்வையின்கீழ் வந்துவிட்டமையும் தனிப்பட்ட ஒரு பண்பாகக் காணப்படுகின்றது. இத்துறையின் முக்கிய பயிர்களாக தேயிலை, றப்பர், தெங்கு என்பன விளங்குகின்றன. இலங்கையில் விவசாயத்துறைக்குரிய நிலத்தில் 15% வீதமான பகுதியில் இப்பயிர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இலங்கையின் மொத்த அந்நிய செலவாணி உழைப்பில் இம்மூன்று பயிர்களும் 1980 ஆம் ஆண்டில் 58 வீதத்தினைப் பெற்றுக்கொடுத்தன. இலங்கையில் விவசாயத்துறையில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளிகளில் ஏறக்குறைய அரைப்பங்கினர் இத்துறையிலேயே ஈடுபட்டுள்ளனர். இப்புள்ளி விபரங்கள் இலங்கையின் விவசாயத்துறையில் பெருந்தோட்டத்துறை பெறும் முக்கியத்துவத்தினைக் காட்டி நிற்கின்றன.

உள்நாட்டு விவசாயமானது குறைந்தளவு முதலுடன் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள ஏராளமான விவசாயிகளையும், அதிகளவு சிற்றுடைமைகளையும் சுய தேவையினைப் பூர்த்தி செய்வதையே முக்கிய நோக்கமாகவும் கொண்டுள்ள துறையாகக் காணப்படுகின்றது. இப்பிரிவில் நெல் மற்றும் உபஉணவுப் பயிர்கள், மரக்கறிகள் போன்றவையே முக்கிய பயிர்களாகக் காணப்படுகின்றன. இத்துறையே இலங்கை மக்களின் பிரதான உணவான அரிசியை உற்பத்தி செய்வதுடன் எதிர்காலத்தில் மிகவும் வளர்ச்சியடைய வேண்டிய துறையாகவும் உள்ளது. அதிகரித்துவரும் வேலைப்படைக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்கும், அந்நிய செலாவணி நெருக்கடியின் அளவினைக் குறைப்பதற்கும், அதிக குடும்பங்களுக்கு வருமானத்தினை வழங்கும் கிராமிய மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கும், இதனூடாகக் கைத்தொழிற்றுறையில் வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்கும் இத்துறையின் வளர்ச்சி அவசியமானதாகும். இலங்கையின் விவசாயத்துறையால் பயன்படுத்தப்படும் நிலத்தில் 10 வீதமான பங்கில் நெல் பயிரிடப்படுகின்றது. இலங்கைக்கு அதிக அந்நிய செலாவணியைத் தரும் பயிரான தேயிலை கூட விவசாயத்துறைக்குரிய நிலத்தில் 4 வீதமான நிலத்திலேயே பயிரிடப்படுகிறது. அதேபோல் விவசாயத்துறையில் வேலைசெய்யும் உழைப்பினரில் 35 வீதமான பகுதியினர் நெற்பயிர்ச் செய்கையிலேயே ஈடுபட்டுள்ளனர். நெற்பயிருடன் ஒப்பிடும்போது உபஉணவுப் பயிர்களின் முக்கியத்துவம் குறைவானதாகவே இருக்கின்றது.

இலங்கையில் உபஉணவுப் பயிர்களாக மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, மரவள்ளி, சோளம், நிலக்கடலை, பாசிப்பயறு, எள்ளு, உழுந்து, சோயாஅவரை, குரக்கன், தினை, பருப்பு போன்றவை விளங்குகின்றன. இலங்கையில் விவசாயத்துறையால் பயன்படுத்தப்படும் நிலத்தில் 4 வீத

மான பகுதியில்தான் இப்பயிர்கள் விளைவிக்கப்படுகின்றன. விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளரில் ஏறக்குறைய 10 வீதமானோர் இப்பயிர்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளனர். மற்றைய பயிர்க ளான தேயிலை, றப்பர், தெங்கு, நெல் ஆகியவற்றுடன் ஒப்பிடுகின்ற போது உபஉணவுப்பயிர்களின் முக்கியத்துவம் குறைவாக இருந்தபோதும் அதிகரித்துவரும் அந்நிய செலாவணி நெருக்கடியைப் பொறுத்தவரை இப் பயிர்களின் உற்பத்தி அதிகரிப்பு மிகவும் அத்தியாவசியமானது என்பதை ஐந்தாண்டுத் (1972 – 1976) திட்டத்தில் பின்வருமாறு கூறப்பட்டதில் இருந்து தெரியவருகிறது.

''ஐந்தாண்டுத் திட்டத்தின் முழு செயற்றிறத்திலும் உள்ள முக்கிய மூல அம்சம் உபஉணவுப் பயிர்களில் இறக்குமதிப்பதிலீடு செய்வதாகும். இது தொழில்வாய்ப்பில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்திற்குப் புறம்பாக, நாட்டிற்குரிய குறைவான அந்நிய செலவாணியைப் பாதுகாப்பதற்கும், அதனை நாட்டின் விருத்திக்குப் பயன்படுத்தச் செய்வதற்குமுரிய முக்கிய மூலாதாரமான வழியாக அமைகிறது.''

உற்பத்திக்காரணியைச் சரிவரப்பயன்படுத்தல், வேலைவாய்ப்பினை அளித்தல், கிராமியமக்களின் வருமானத்தினை அதிகரித்து வாழ்க்கைத்தரத் தினை உயர்த்தல், அந்நிய செலாவணி நெருக்கடியைக் குறைத்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உபஉணவுப் பயிர்களின் உற்பத்தியினை அதிகரிக்கச் செய்வதும் அவசியமென்பதில் ஐயமில்லை.

இலங்கை சுதந்திரமடைந்தபோது வெளிநாட்டுச் சொத்து சாதக மான நிலைமையில் காணப்பட்டது. அத்துடன் கொரியயுத்தம் தேயிலையின் விலைஏற்றம் போன்ற காரணிகளினால் 1951ஆம், 1954ஆம் ஆண்டுகளில் சென்மதிநிலுவையும் இலங்கைக்குச் சாதகமாகவே இருந்தது. இதனால் இலங்கையின் சிறுஉணவுப் பயிர்கள் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமை இருந்தும்கூட அப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. 1956ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக சென்மதிநிலுவையில் பாதகநிலை ஏற்படத் தொடங்கியபோதும் 1960ஆம் ஆண்டின் இறுதிப் பகுதிவரை உபஉணவுப் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதிலோ அவற்றின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதிலோ கவனம் செலுத் தப்படவில்லை. உள்நாட்டில் சிறியளவில் உபஉணவுப் பயிர்கள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தபோதும் அவையற்றி அறிந்துகொள்வதில் அரசாங்கம் அதிகஅக்கறை காட்டவில்லை என்பதை 1962ஆம் ஆண்டு குறுங்கால செயற்படுதிட்டத்தில் ''உபஉணவுப் பயிர்களின் உற்பத்திபற்றி நம்பத் தகுந்த தரவுகள் கிடைக்கவில்லை'' என்று கூறப்படுவதில் இருந்து அறிந்து கொள்ளலாம். உள்நாட்டு உற்பத்தியில் அக்கறை காட்டாமையால் தொடர்ந்து உபஉணவுப் பொருட்களில் இறக்குமதி அதிகரித்துக் கொண்டே வந்தது. இதனை 1962ஆம் ஆண்டு குறுங்கால செயற்படுதிட் டத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளதில் இருந்து தெரிந்துகொள்ள முடி கிறது.

''எமது பிரதான உபஉணவுப் பொருட்களின் இறக்குமதி உண்மையி லேயே அதிகரித்தது. ஒருபக்கம் வாழ்க்கைத்தர உயர்வின் காரணமாக

தலாநுகர்வின் அளவு அதிகரித்ததனாலும் இன்னொருபக்கம் உள்நாட்டு கேள்விக்கேற்ற வகையில் உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்காததினாலுமே இறக்குமதித் தொகை அதிகரித்தது.’’

உண்மையில் இலங்கை அரசாங்கம் 1970 களில் உபஉணவுப் பொருட்களின் உற்பத்தியில் காட்டிய அக்கறைபோல சுதந்திரமடைந்த காலம் தொட்டே காட்டியிருப்பின் 1950 களிலேயே உபஉணவுப் பொருட்களைப் பொறுத்தவரையில் இலங்கை தன்நிறைவைப் பெற்றிருக்கக்கூடும். உப உணவுப் பயிர்களின் உற்பத்திக்கேற்ற நிலம், நீர்வசதி, உழைப்பாளர் போன்றன இருந்தும் அவற்றின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தி அவற்றை உள்ளூரில் உற்பத்திசெய்வதற்கு அக்கறை காட்டாமல் விட்டமை அரசாங்கங்களின் தவறேயாகும்.

சென்மதிநிலுவையில் காணப்பட்ட குறுங்கால சாதக நிலைமையால் நீண்ட கால நோக்கமின்றி பொருட்களைத் தாராளமாக இறக்குமதி செய்யக்கூடியதாக இருந்தமை, அரிசி, சீனி, மா போன்றவற்றின் இறக்குமதிக் கொடுப்பனவுகளுடன் ஒப்பிடுகின்றபோது உபஉணவுப் பொருட்களின் இறக்குமதிக் கொடுப்பனவு மிகச் சிறிதாக இருந்தமை, வெங்காயம், மிளகாய் ஆகியவற்றின் உள்நாட்டு உற்பத்திச் செலவானது இறக்குமதி செய்யப்படும் விலையைவிடக் கூடுதலாக இருந்தமை, முதலியவற்றால் அரசாங்கம் இவற்றின் உற்பத்தியில் அக்கறை காட்டாமல் இருந்திருக்கலாம். எனினும் 1956 ஆம் ஆண்டின் பின்னர் சென்மதிநிலுவையில் ஏற்பட்ட பாதக நிலைமையால் அந்நிய செலாவணி நெருக்கடி ஏற்பட 1960 களின் நடுப்பகுதியில் பல பொருட்களின் இறக்குமதியில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. உள்நாட்டிலேயே உபஉணவுப் பயிர்களின் உற்பத்தியில் தன்னிறைவு அடையலாம் என ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. இதன் பின் அரசாங்கம் இப்பயிர்களின் உற்பத்தியில் கவனம் செலுத்தத் தொடங்கியது.

1960 களின் முடிவுப்பகுதியில் உபஉணவுப் பொருட்களின் இறக்குமதியில் படிப்படியாகக் கட்டுப்பாடு அல்லது முற்றாகவே இறக்குமதியைத் தடைசெய்யும் நிலை ஏற்பட்டது. இளைஞர் குடியேற்றத்திட்டங்களை ஏற்படுத்தி உபஉணவுப் பயிர்களை உற்பத்திசெய்தல், நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்தல், உத்தரவாத விலையை நிர்ணயித்தல், காலத்துக்குக்காலம் நிலைமைக்கேற்றபடி உத்தரவாத விலையை உயர்த்துதல், சந்தைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல், வளமாக்கிகள் களைகொல்லிகளை மானிய விலையில் வழங்குதல், உற்பத்தியாளர்களுக்கு விவசாய உத்தியோகத்தர்கள் மூலம் ஆலோசனை வழங்குதல், காசாகவோ அல்லது பொருளாகவோ குறுங்கடன் வழங்குதல், காடழிப்பதற்கும் தண்ணீர் இறைக்கும் யந்திரம், தெளிகருவி போன்றவற்றை வாங்குவதற்கும் மத்திய காலக்கடன் வழங்குதல், நல்லின விதைகளை வழங்குதல் முதலியவற்றின்மூலம் இலங்கை அரசாங்கம் உபஉணவுப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு முயன்றது.

இலங்கையில் விளைவிக்கப்படும் உபஉணவுப் பயிர்களில் முக்கியமானவையாக மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு முதலியன விளங்குகின்

றன. இலங்கை மக்களின் நாளாந்த உணவிலும் இவை முக்கிய இடம் பெறுகின்றன. 1973ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட நுகர்வோர்நிதி அளவீட்டின் படி, இரண்டு மாதங்களுக்குரிய தரவை எடுத்து நோக்கின் இலங்கை மக்களின் தலாநுகர்வானது காய்ந்த மிளகாயைப் பொறுத்தவரையில் 3.84 அவுன்சாகவும், பச்சைமிளகாயில் 16.17 அவுன்சாகவும் வெங்காயத்தில் 11.62 அவுன்சாகவும், உருளைக்கிழங்கில் 7.64 அவுன்சாகவும் அமைகிறது. வாழ்க்கைத்தரம் அதிகரிக்க இவற்றின் தலாநுகர்வு மேலும் அதிகரித்துச் செல்வதையும் நாட்டின் சனத்தொகை அதிகரிக்க மொத்த நுகர்வு அதிகரித்துச் செல்வதையும் காணலாம். இதனால் காலப்போக்கில் இவற்றின் இறக்குமதியும் அதிகரிக்கும். உலக சந்தையில் இவற்றின் விலை அதிகரித்துச் செல்லுமாயின் இறக்குமதிக் கொடுப்பனவுத் தொகையும் அதிகரித்து அந்நிய செலாவணி நெருக்கடியை மேலும் மோசமடையச் செய்யும். இவற்றினை உள்நாட்டில் உற்பத்திசெய்யின் அந்நிய செலாவணியைச் சேமிக்கமுடியும். இதனை முக்கிய நோக்கமாகக்கொண்டு 1970 ஆம் ஆண்டில் பதவிக்குவந்த கூட்டுமுன்னணி அரசாங்கம் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் இறக்குமதியைப் பெருமளவு கட்டுப்படுத்தியது. இதன் காரணமாக உள்நாட்டில் பாதுகாக்கப்பட்ட சந்தை காணப்பட இப்பொருட்களின் விலைகள் அதிகரித்தன. அதிகரித்த விலைகள் உற்பத்தியாளர்களைக் கவர்ந்ததால் இப்பொருட்களின் உற்பத்தியில் பல விவசாயிகள் ஈடுபடத்தொடங்கினர். இதனால் இப்பொருட்களின் உற்பத்தியானது 1970 ஆம் ஆண்டின் பின்னர் வேகமாக அதிகரிக்கத்தொடங்கியது. இதனைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

## அட்டவணை 1

### மிளகாய், சின்னவெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் உற்பத்தி 1970 — 1980

(0001 மெற்றிக் தொன்களில்)

| ஆண்டு | மிளகாய் | சின்னவெங்காயம் | உருளைக்கிழங்கு |
|---|---|---|---|
| 1970 | 6.4 | 41.5 | 32.4 |
| 1971 | 7.4 | 42.3 | 38.3 |
| 1972 | 12.1 | 59.0 | 46.9 |
| 1973 | 19.6 | 68.2 | 39.6 |
| 1974 | 17.3 | 70.7 | 30.4 |
| 1975 | 16.4 | 72.8 | 26.3 |
| 1976 | 19.1 | 78.3 | 38.7 |
| 1977 | 31.3 | 66.3 | 33.4 |
| 1978 | 28.3 | 72.3 | 38.4 |
| 1979 | 21.9 | 62.8 | 52.7 |
| 1980 | 25.5 | 79.1 | 75.9 |

மூலம்: வேளாண்மை அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சு

1970 களின் ஆரம்பப் பகுதியில் காணப்பட்ட உற்பத்தியிலும் பார்க்க பிற்பகுதியில்தான் இம்மூன்று பயிர்களினதும் உற்பத்தியானது வேகமாக அதிகரித்தது. குறிப்பாக 1973 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உள்நாட்டில் இவற்றின் விலைகள் அதிகரித்ததனாலும், அரசாங்கத்தின் உணவு உற்பத்தி இயக்கத்தினாலும் வெறுமனவே கிடந்த பல நிலங்கள் உபஉணவுப் பயிர்ச் செய்கைக்கு உட்பட்டன. காலத்துக்குக் காலம் பயிர் செய்யப்படும் நிலப்பரப்பு அதிகரித்ததனால் உற்பத்தியும் தொடர்ந்து அதிகரித்தது. உள்நாட்டு உற்பத்தி அதிகரித்ததனால் நாட்டின் இப்பொருட்கள் குறித்து சுயதேவையைப் பூர்த்தி செய்யும் நிலை ஏற்பட, 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல ஆண்டுகளில் இப்பொருட்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டன.

மிளகாய், வெங்காயம் ஆகியவற்றின் தேசிய ரீதியான உற்பத்தி அதிகரிப்பில் யாழ்ப்பாண மாவட்டத்தின் பங்கு குறிப்பிடவேண்டியதொன்றாகும். 1970 ஆம் ஆண்டின் பின் இலங்கையில் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏறக்குறைய மூன்றிலொரு பகுதி யாழ்ப்பாண மாவட்டத்துக்குள்ளேயே அமைந்திருந்தது. இலங்கையின் மிளகாய் உற்பத்தியில் 40 வீதத்திற்கு மேற்பட்ட உற்பத்தியினை யாழ்ப்பாண மாவட்டமே செய்தது. 1970 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சின்ன வெங்காயம் விளைவிக்கப்பட்ட நிலப்பரப்பில் 50 வீதத்திற்கு மேற்பட்ட நிலமானது யாழ்ப்பாண மாவட்டத்திற்குள்ளேயே அமைந்திருந்தது. ஆனால் சின்ன வெங்காயத்தின் உற்பத்தியில் 2 / 3 பங்குக்கு மேற்பட்ட அளவினை யாழ்ப்பாணமாவட்டமே உற்பத்தி செய்தது. காரணம் தேசிய ரீதியான சராசரிவிளைச்சலை விட யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏக்கருக்குரிய சின்ன வெங்காயத்தின் விளைச்சலானது கூடுதலானதாக இருந்தமையாலாகும். மிளகாயினைப் பொறுத்தும் ஏக்கருக்குரிய சராசரி விளைச்சலானது ஏனைய மாவட்டங்களைவிட யாழ்ப்பாண மாவட்டத்திலேயே கூடுதலாகக் காணப்படுகிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் மிளகாய், சின்னவெங்காயம் போன்றவற்றின் செய்கைக்கு ஏற்ற நல்ல மண் இருத்தல், நீர்ப்பாசன ஒழுங்குமுறை இருத்தல், மற்றும் யாழ்ப்பாணமாவட்ட விவசாயியின் சரியான கண்காணிப்பு, ஒழுங்காகப் பசளையிடல் முதலியவையே தேசிய ரீதியான சராசரி விளைச்சலை விட யாழ்ப்பாண மாவட்டத்தின் சராசரி விளைச்சல் கூடுதலாக இருப்பதற்குக் காரணமாகும்.

1970 ஆம் ஆண்டின் பின்னர் உபஉணவுப் பொருட்களின் உற்பத்திக்கு அரசாங்கம் பல வழிகளிலும் ஊக்கம் கொடுத்தது. எனினும் நாளாந்தம் பணப்பற்றாக்குறையினால் அல்லற்படும் சிறு விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் திட்டங்களை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். அடுத்த பகுதியானது உள்நாட்டு விவசாயத்துறைக்குக் கடன் வழங்கும் நிறுவன ரீதியான மூலாதாரங்களை வரலாற்று நோக்கில் சுருக்கமாக ஆராய்வதுடன் உபஉணவுப்பயிர்களுக்குக் கடன் வசதியினை அளிக்கின்ற திட்டங்கள் பற்றியும் ஆராய்கிறது.

## பகுதி 11

கிராமிய விவசாயிகளுக்குக் கடன் வசதியினை அளிக்கும் மூலாதாரங்களை இரு வகையாகப் பிரிக்கலாம்.

(அ) நிறுவன ரீதியான மூலாதாரங்கள்

(ஆ) நிறுவன ரீதியற்ற மூலாதாரங்கள்

நிறுவன ரீதியான மூலாதாரம் என்பதற்குள் அரசாங்கத் திணைக்களங்கள், வணிகவங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய வங்கிகள் முதலியன அடங்குகின்றன. நிறுவன ரீதியல்லாத மூலாதாரங்கள் என்பதற்குள் கடன் கொடுப்பதையே முழு நேரத் தொழிலாகக் கொண்டவர்கள், கடன் கொடுப்பதைப் பகுதிநேரத் தொழிலாகக் கொண்டவர்கள், சிறிய கடைக்காரர்கள், நிலப்பிரபுக்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோர் அடங்குவர். இலங்கையில் செய்யப்பட்ட கிராமியப்படுகடன் பற்றிய ஆய்வுகள் கூறும் முடிவு யாதெனில் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் ஆரம்ப காலத்தில் நிறுவன ரீதியான மூலாதாரங்களின் பங்கு குறைவாக இருந்தது என்பதும். பின்னர் அதன் பங்கானது அதிகரித்து வருகின்றது என்பதும் ஆகும். இதனைப் பின்வரும் அட்டவணையில் இருந்து அறிந்து கொள்ளலாம்.

## அட்டவணை 2

### கிராமியக் கொடுகடனில் நிறுவன ரீதியான மூலாதாரத்தினதும், நிறுவன ரீதியற்ற மூலாதாரத்தினதும் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவம் (சதவீதத்தில்)

| ஆண்டு | 1957[1] | 1969[2] | 1976[3] |
|---|---|---|---|
| நிறுவன ரீதியானது | 7.8 | 25.0 | 54.6 |
| நிறுவன ரீதியற்றது | 92.2 | 75.0 | 45.4 |

மூலங்கள்:
1. Dept. of census and statistics. Survey of Rural Indebtedness, 1957
2. Central Bank of Ceylon. Survey of Rural Credit and Indebtedness, 1969.
3. Central Bank of Ceylon. Survey of Rural Credit and Indebtedness among Paddy farmers, 1976.

மேற்கூறிய மூன்று ஆய்வுகளும் தேசிய ரீதியாக நடாத்தப்பட்டவையாகும். மிகவும் வரையறுக்கப்பட்ட அளவில் விவசாய சேவைகள் திணைக்களத்தினால் 1961 – 62 இல் கிராமியக் கொடுகடன் மூலாதாரங்களின் பரம்பல் பற்றி ஆய்வு நடாத்தப்பட்டது. அவ்வாய்வின்படி பெற்ற முடிவு யாதெனில் மொத்தக் கிராமியக் கொடுகடனில் நிறுவன ரீதியான மூலாதாரங்கள் 34·2 வீதத்தினை வழங்க, நிறுவன ரீதியற்ற மூலாதாரங்கள் 65 . 8 வீதத்தினை வழங்கின என்பதாகும். அட்டவணை 2 இனை நோக்கினால் காலப்போக்கில் நிறுவனரீதியான மூலாதாரங்களின் பங்கு நிறுவனரீதியற்ற மூலாதாரங்களின் பங்கினைவிட அதிகரித்து உள்ளதைக் காணலாம். எனினும் 1976 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட ஆய்வானது நெற்செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகளை மட்டுமே கவனத்தில்

எடுத்துக்கொண்டிருப்பதைக் குறிப்பிடுதல் வேண்டும். நெற்செய்கையே கிராமியத் துறையில் முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இருக்கிறது. அந்தவகையில் கிராமியக் கொடுகடன் பற்றிய நிலையை இது பருமட்டாக எடுத்துக்காட்டினும் மொத்தமாகக் கிராமியத்துறை முழு வதையும் எடுத்துக் கொள்ளின் இவ்விகிதாசாரங்களில் சில சிறிய மாறு தல்கள் ஏற்படலாம். எனினும் காலப்போக்கில் கிராமியக் கொடுகடனில் நிறுவன ரீதியான மூலாதாரங்களின் பங்கு அதிகரித்து வருவதையே இவை விளக்கி நிற்கின்றன. அண்மைக் காலத்தில் நிறுவன ரீதியான மூலாதா ரங்களால் வழங்கப்படும் கடனின் தொகை அதிகரித்தமையும் கிராமியத் துறைக்குக் கடன் வழங்கும் நிறுவனங்களின் தொகை அதிகரித்தமையுமே இதற்குக் காரணமாகும்.

இலங்கையில் 1961ஆம் ஆண்டு மக்கள் வங்கி அமைக்கப்பட்ட பின்னர் கிராமியக் கொடுகடனில் அது முக்கியத்துவம் பெறத் தொடங்கியது. படிப் படியாக அரசாங்கத்தால் கிராமியக் கொடுகடன் திட்டங்கள் ஆரம்பிக் கப்பட்டமையும், 1964 ஆம் ஆண்டு கூட்டுறவுக்கிராமிய வங்கித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுக் கிராமப்புறங்களில் கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் அமைக் கப்பட்டமையும் 1973 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை வங்கி கிராமப் புறங்களில் உள்ள விவசாய சேவை நிலையங்களில் உப அலுவலகங்களை அமைத்து விவசாயிகளுக்குக் கடன் வழங்க முற்பட்டமையும் இவற்றின் காரணமாகக் கிராமப்புற மக்களின் வங்கிப்பழக்கம் அதிகரித்தமையும் கிரா மியக் கொடுகடன் வழங்கலில் பிற்காலத்தில் நிறுவன ரீதியான மூலா தாரங்களின் பங்கு அதிகரித்துச் சென்றமைக்கு முக்கிய காரணங்களாகும். 1967 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புதிய விவசாயக் கொடுகடன் திட் டத்துடன் உபஉணவுப் பயிர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை பெரு மளவாக அதிகரித்தது. அதற்குப்பின்னர் உள்ள நிலைமைகளை விரிவாக ஆராய்வதற்கு முன்னர் இலங்கையில் நிறுவன ரீதியான கொடுகடன் மூலாதாரத்தினது வளர்ச்சியைச் சுருக்கமாக நோக்குவது இவ்வாய்வுக் கட்டுரைக்குப் பொருத்தமானதொன்றாகும்.

இலங்கையில் முதன் முதலில் கிராமியக் கொடுகடனில் ஈடுபட்ட நிறுவன ரீதியான மூலாதாரம் கூட்டுறவுச் சங்கமேயாகும். 1911 ஆம் ஆண்டில் இலங்கையில் கூட்டுறவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது கடன் வழங்குவதே அதன் பிரதான நோக்கமாக இருந்தது. எனினும் மிகக் குறைந்தளவு வீதமான விவசாயிகளே இச் சங்கங்கள் மூலம் கடன் பெற்றனர். இவற்றைப் பயன்படுத்தி விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் முயற்சியை 1947 இல்தான் அரசாங்கம் முதன்முதல் மேற்கொண்டது.

1947 இல் இருந்து உணவு உற்பத்தித் திணைக்களமானது கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனைச் சங்கங்களின் ஊடாகப் பயிர்ச் செய்கை நோக்கத்திற்காகக் குறுங்காலக்கடன்கள் வழங்குவதையும், விவசாய இயந் திரங்களை வாங்குவதற்காக நடுத்தர காலக்கடன்களை வழங்குவதையும் மேற்கொண்டது. அத்துடன் வாகனங்களை வாங்குவதற்கும் களஞ்சிய வசதிகளை ஏற்படுத்துவதற்கும் கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனைச் சங்கங்களுக்கு நீண்டகாலக்கடனும் வழங்கப்பட்டது. இத் திட்டத்தின்

கீழ் வழங்கப்பட்ட கடன்கள் 1947 / 48 இல் 4.36 மில்லியன் ரூபாய்களாக இருந்து 1952 / 53 இல் 15.86 மில்லியன் ரூபாய்களாக அதிகரித்தது. 1956 / 57 இல் கிராமிய விவசாயத்திற்கு பல்வேறுவகையிலும் நிறுவன ரீதியான உதவிகளை வழங்கவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. கிராமியக்கடன் திட்டத்தினை முக்கிய தொழிற்பாடுகளில் ஒன்றாகக் கொண்டதாகக் கமத்தொழில் சேவைத் திணைக்களம் என்ற புதிய திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. நெல்பயிரிடும் நிலங்களில் குத்தகை உரிமைகளை ஒழுங்குபடுத்தல், நெல்லுக்கும் ஏனைய பயிர்களுக்கும் உத்தரவாத விலையை அளித்தல், நெற்பயிருக்கான காப்புறுதித்திட்டம் போன்ற நிறுவன ரீதியான அம்சங்கள் ஒரே நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டன.

1957ஆம் ஆண்டில் கூட்டுறவு விவசாய உற்பத்தி விற்பனைச் சங்கங்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக மாற்றம் பெற்றன. எனினும் இவை தொடர்ந்து விவசாயிகளுக்குக் கடன்வழங்கும் நிறுவனங்களாகவும் தொழிலாற்றின. 1956/57ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கடனின் அளவு 21.9 மில்லியன் ரூபாய்களாக இருந்தது. எனினும் இத்தொகை பின்னர் குறைவடைந்தது· 1962/63 இல் இது 10.6 மில்லியன் ரூபாய்களாக இருந்தது. பெற்றகடனை விவசாயிகளில் பெரும்பாலோர் திருப்பிக் கொடாமை, கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர்கள் தமது பங்குமுதலைச் செலுத்தத் தவறியிருந்தமையால் கடன்பெறும் தகுதியை இழந்திருந்தமை, நெற்செய்கையில் ஈடுபட்டிருப்போரில் மூன்றில் இரண்டு பங்கினரே கூட்டுறவு அங்கத்தினர்களாக இருந்தமை, பழைய கடன்களைத் திருப்பிச்செலுத்தத் தவறியதன் காரணமாகக் கூட்டுறவுச் சங்கங்களில் ஏறக்குறைய மூன்றிலொரு பகுதி சங்கங்கள் கடன்பெறும் தகுதியை இழந்திருந்தமை முதலிய காரணிகளால் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் குறைபாடுடையனவாகத் தெரிந்தன. மேலும் விவசாயிகளின் நுகர்வுக் கடன்பற்றிக் கூட்டுறவுச் சங்கங்கள் அதிக கவனம் செலுத்தாததால் விவசாயிகள் தனிப்பட்ட கடன் கொடுப்பனவு செய்வோரின் பிடியில் இருப்பதற்கு வழிவகுத்தது. கூட்டுறவு இயக்கத்திட்டம் அதிகபணம் இல்லாமல் இருந்ததும் முக்கிய குறைபாடாகும். கூட்டுறவு இயக்கம் நாடெங்கிலும் உணவுப் பொருட்கள் விநியோகிப்பதில் அதிககவனம் செலுத்தியபடியால் விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் விடயத்தில் அதிககவனத்தினை அதனால் செலுத்த முடியவில்லை. இக்குறைபாடுகளை நீக்கிக் கூட்டுறவு இயக்கத்தினை அபிவிருத்தி செய்யவும் கிராமியத் துறையினை விருத்திசெய்யவும் மக்கள் வங்கி 1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

மக்கள் வங்கியின் ஆரம்பத்துடனேயே வணிக வங்கிகள் இலங்கையின் உள்நாட்டு விவசாயத் துறைக்கான, குறிப்பாக நெல் மற்றும் உபஉணவுப் பயிர்ச் செய்கைக்குக் கடன் வழங்குவதில் ஈடுபட்டன எனலாம். எனினும் 1961ஆம் ஆண்டுக்குப் பின்னர், உருவாக்கப்பட்ட கடன்திட்டங்களை நடைமுறைப்படுத்துதற்கு மக்கள்வங்கி கூட்டுறவுத்துறையினையே துணைக்கு அழைத்துக் கொண்டது. கிராமியத்துறையில் உள்ள மக்களுக்குக் கூட்டுறவுத்துறை மிகவும் பழக்கப்பட்டதொன்றாக இருந்தமையால் இவற்றின் மூலம் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே சிறப்பான முறையாகக் காணப்பட்டது. எனவேதான் கிராமியத்துறையின் கடன் கொடுப்பனவில்

கூட்டுறவுத் துறையின்பங்கு இன்றும் முக்கியத்துவம் பெறுகிறது. 1960ஆம் ஆண்டின் பின்னர் உருவாக்கப்பட்ட முக்கியமான விவசாயக் கடன்திட்டங்களுக்குக் கூட்டுறவுத்துறை சொந்தநிதியை வழங்குவது குறைவெனினும் அவற்றை அமுல் நடாத்துவதில் கூட்டுறவு இயக்கமே கிராமிய மட்டத்தில் முதல் நிலைவகிக்கின்றது.

1963இல் விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்காக விரிவாக்கப்பட்ட கொடுகடன் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் உற்பத்தி நுகர்வு, குடிசைக்கைத்தொழில், வீடு கட்டுதல், வீடு திருத்துதல், வீடு பெரிதாக்குதல், கடன் மீட்சி, மின்சாரமயப்படுத்தல் மற்றும் அவசரத் தேவைகள் என்பவற்றுக்காகக் கடன் வழங்கப்பட்டது. விவசாயியின் நுகர்வுத் தேவைக்கான கடனையும் இத்திட்டத்தின்போது கவனத்தில் எடுத்துக்கொண்டமை கவனிக்கத்தக்கது. மக்கள் வங்கியானது தெரிந்தெடுத்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு இக்கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நிதி உதவிசெய்தது. 1967ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட புதியவிவசாயக் கொடுகடன் திட்டத்தில், விரிவாக்கப்பட்ட கொடுகடன் திட்டத்தில் காணப்பட்ட அமிசங்கள் இருந்தபடியால் 1971ஆம் ஆண்டில் விரிவாக்கப்பட்ட விவசாயக் கொடுகடன் திட்டம் நிறுத்தப்பட்டது. 1964ஆம் ஆண்டு கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கிராமிய வங்கிகள் இன்று நாடெங்கிலும் பரந்து விரிவடைந்து தொழிலாற்றுகின்றன. நகை அடைவு பிடிக்கும் தொழிலிலும் ஈடுபடுகின்றன. 1980ஆம் ஆண்டின் முடிவில் நாடு முழுவதிலும் 284கூட்டுறவுக் கிராமிய வங்கிகளும், 357 கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சிறப்புக் கிளைகளும் தொழிலாற்றின. இவற்றின் மூலம் உபஉணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருப்போர் கடன்பெற முடிகிறது. அண்மைய ஆண்டுகளில் கிராமிய சேமிப்புக்களைத் திரட்டுவதில் இவை வெற்றிபெற்ற போதும் கிராமிய மக்களுக்குக் கடன்வழங்கும் அளவு குறைந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் பெற்றகடனை விவசாயிகள் திரும்பச் செலுத்தாமையாகும். பெற்றகடனை மீளப்பெறுவதில் நிறுவன ரீதியான மூலாதாரங்கள் பெரியபிரச்சனையை இன்று எதிர் நோக்குகின்றன.

கிராமியத்துறைக்குக் கடன் வழங்குவதற்கு அடுத்து ஆரம்பிக்கப்பட்ட திட்டம் 1967 இல் உருவாக்கப்பட்ட புதிய விவசாயக் கொடுகடன் திட்டம் ஆகும். இது முன்னைய திட்டங்களைவிடச் சில முன்னேற்றமான பண்புகளைக் கொண்டிருந்தது. நெற்பயிருக்குக் கடன் வழங்குவதில் சில முன்னேற்ற முறைகள் இத்திட்டத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டன. அவைபற்றி இங்கு கூறுதல் கட்டுரையின் நோக்கத்திற்கு அப்பாற்பட்டு விடும் என்பதால் அதனைத்தவிர்த்து விடுதல் நல்லது. எனினும் இத்திட்டத்தின் ஆரம்பத்துடன் இலங்கை மத்தியவங்கியும் மறைமுகமாக விவசாயக் கொடுகடன் திட்டத்தில் ஈடுபடத் தொடங்கியமை குறிப்பிடத்தக்க அமிசமாகும். இத்திட்டத்தின்கீழ் நிதிவழங்கும் இறுதிக்கடன் மூலாதாரமாக மத்தியவங்கி அமைந்திருந்தது. அதாவது மக்கள்வங்கியினால் வழங்கப்பட்ட முழுக்கடன் தொகைக்கும் மத்தியவங்கி நிதியீட்டம் செய்தது. மேலும் திரும்பி வரத்தவறிய கடன்களின் 75 சதவீதத்திற்கு மத்தியவங்கி பொறுப்பாக நின்று உத்தரவாதமளித்தது. வணிகவங்கிகளைப் பயமின்றிக்

கிராமியக் கொடுகடன் வழங்கலில் ஈடுபடச் செய்வதற்கு மத்தியவங்கி இத்தகைய நிலையை எடுத்துக் கொண்டதெனலாம். எனினும் 1978ஆம் ஆண்டுடன் இந்த உத்தரவாதமுறை நிறுத்தப்பட்டது.

1967 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட புதிய விவசாயக் கொடுகடன் திட்டத்துடன்தான் உபஉணவுப் பயிர்களுக்கு ஒழுங்காக, திட்டமிட்ட முறையில் கடன் வழங்கும்முறை ஆரம்பிக்கப்பட்டது. மிளகாய், சின்ன வெங்காயம், உருளைக்கிழங்கு, மரக்கறிகள், பம்பாய் வெங்காயம், நிலக் கடலை, சோளம் போன்ற பயிர்களுக்குக் கடன் வழங்கப்பட்டது. கடனில் ஒருபகுதி காசாகவும், இன்னொருபகுதி பொருளாகவும் வழங்கப்பட்டது. பொருளாக வழங்கின் அதனை விவசாயிகள் பயிர்செய்கைக்கே உபயோ கிப்பர் என நினைத்தே இம்முறை ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு பயி ருக்கும் அவற்றிற்கு ஏற்படக்கூடிய செலவுக்கேற்ற வகையில் வெவ்வேறான அளவு தொகை கடன் வழங்கப்பட்டது. உதாரணமாக மிளகாய்ப் பயி ருக்கு ஒரு ஏக்கருக்கு 125 ரூபாவும், வெங்காயத்திற்கு ஒரு ஏக்கருக்கு 800 ரூபாவும், உருளைக்கிழங்கிற்கு ஒரு ஏக்கருக்கு 1400 ரூபாவும் வழங் கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. இவை குறுங்காலக்கடன் களாக அமைய, உபஉணவுச் செய்கைக்காக மத்திய காலக் கடன்களும் வழங்கப்பட்டன. உபஉணவுச் செய்கைக்காகக் காடுகளை அழிப்பதற்கு ஏக் கருக்கு 250 ரூபாய்கள் என்ற வகையில் கடன்களை வழங்குமாறு கூட்டு றவுச் சங்கங்களுக்குக் கமத்தொழில் சேவைக்களத்தினுல் கடன் வழங்கப் பட்டது. மேலும் தெளிகருவி, தண்ணீர் இறைக்கும் யந்திரம் போன்ற வற்றை வாங்குவதற்கும் கடன்கள் வழங்கப்பட்டன. காலத்துக்குக் காலம் கடன் தொகைகள் அதிகரிக்கப்பட்டன. உதாரணமாக 1973 ஆம் ஆண் டில் மிளகாய்க்கு ஏக்கருக்கு 1375 ரூபாய்களும், சின்ன வெங்காயத்திற்கு ஏக்கருக்கு 2265 ரூபாய்களும், உருளைக்கிழங்குக்கு ஏக்கருக்கு 3365 ரூபாய் களும் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது. இப்புதிய விவ சாயக் கொடுகடன் திட்டமானது இன்னும் நடைமுறையில் இருந்து வரு கிறது. இத்திட்டத்தின் கீழ் உபஉணவுப் பயிர்களுக்கு இன்னும் கடன்கள் வழங்கப்படுகின்றன. 1974 ஆம் ஆண்டுவரை இலங்கையின் விவசாயக் கொடுகடன் திட்டங்களில் இது முக்கிய பங்கு வகித்து வந்துள்ளது. இதனை 1974 ஆம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கையில் "முன்போல புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டமே உள்நாட்டு வேளாண்மைக்கான முதன்மையான கொடுகடன் மூலமாக விளங்கிற்று" எனக் கூறப்படுவ தில் இருந்து அறிந்து கொள்ளலாம். எனவே இத்திட்டம் 1967 ஆம் ஆண்டு தொடக்கம் 1974 ஆம் ஆண்டு வரை விவசாயக் கொடுகடன் வழங்கலில் முக்கிய பங்கினைப் பெற்று வந்துள்ளதை அறியலாம்.

1974 ஆம் ஆண்டுக்குப்பின்னர் விவசாயக் கொடுகடன் வழங்கலில் 1973 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அனைத்தையும் உள்ளடக்கிய கிரா மியக் கொடுகடன் திட்டம் முக்கிய இடத்தினைப் பெறத்தொடங்கியது. இதனை 1975 ஆம் ஆண்டு மத்தியவங்கி அறிக்கையில் "உள்நாட்டு விவ சாயத்திற்கு அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் திட்டமே நிறுவனக் கொடுகடனின் முதன்மை மூலமாகும்." எனக் கூறப்படுவதில் இருந்து அறிந்து கொள்ளலாம். அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடு

கடன் திட்டத்தில் காணப்பட்ட சில ஏற்பாடுகள் புதிய விவசாயக் கொடுகடன் திட்டத்தில் காணப்பட்ட சில ஏற்பாடுகளுக்கும் பொருந்துவனவாகக் காணப்பட்டன. இத்திட்டத்தின்படி கடனின் உச்ச வரம்புகள் குறிப்பிட்ட பிரதேசங்கள் பல வகையான பயிர்கள் என்பவற்றுக்குப் பொருத்தமான வகையில் வரையறுக்கப்படுமென்ற அமிசமும் புகுத்தப்பட்டது. உதாரணமாக நீர்ப்பாசன மூலம் மிளகாய்ப் பயிர் செய்யும் பிரதேசங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 1375 ரூபாவும் மழைவீழ்ச்சி மூலம் மிளகாய்ப் பயிர் செய்யும் பிரதேசங்களுக்கு ஒரு ஏக்கருக்கு 750 ரூபாவும் கடனாக வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும் கடன் வசதிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்படுமெனக் கூறப்பட்டது. கிராமிய வங்கிகள் இல்லாத இடங்களில் மக்கள் வங்கி முன்புபோலப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகக் கடன்களை வழங்குமெனக் கூறப்பட்டது.

அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழ் கடன்களை வழங்குவதற்கு இலங்கை வங்கியும் நெல், மற்றும் உப உணவுப் பயிர்களுக்குக் கடன் வழங்குவதில் ஈடுபடத் தொடங்கியது. விவசாயசேவை நிலையங்களில் உள்ள இலங்கை வங்கியின் உபஅலுவலகங்கள் ஊடாக இக்கடன்களை இலங்கைவங்கி விவசாயிகளுக்கு வழங்குகிறது. கிராமியப் பகுதிகளுக்கான கடன்கள் என்பதால் கிராமப் பகுதிகளில் அமைந்த விவசாய சேவை நிலையங்களில் இலங்கை வங்கியின் உபஅலுவலகங்கள் அமைக்கப்பட்டன. இலங்கை வங்கியானது கூட்டுறவு மூலமாக அல்லாது நேரடியாகவே விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ளது. இவ்வாறு வங்கிகள் நேரடியாகக் கடன்கொடுத்தலில் ஈடுபடும்போது அதில் இருந்து கடன்பெறும் விவசாயிக்குத் தான் ஒரு வாடிக்கையாளர் என்ற உணர்வு ஏற்படும் என்றும், இதனால் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்க முயல்வார் என்றும் கருதப்பட்டது. 1980ஆம் ஆண்டில் 387 இலங்கை வங்கித் துணைஅலுவலகங்கள் விவசாயக் கொடுகடன் வழங்கலில் ஈடுபட்டிருந்தன. ஹற்றன் நஷனல் வங்கியும் விவசாயக் கொடுகடன் வழங்கலில் ஈடுபட்டுள்ளது. எனினும் அது உபஉணவுப்பயிர்களுக்குக் கடன்வழங்க ஆரம்பிக்கவில்லை. அத்துடன் இலங்கைவங்கி, மக்கள் வங்கி ஆகியவற்றுடன் ஒப்பிடும்போது விவசாயக் கொடுகடன் வழங்கலில் ஹற்றன் நஷனல் வங்கியின் பங்கு மிகச் சிறிதேயாகும்.

சுருங்கக்கூறின் இலங்கை அரசாங்கம் 1960ஆம் ஆண்டிற்குப் பின்னர் பல திட்டங்களின் மூலம் கிராமிய விவசாயிகளுக்கான கடன்பெறும் வசதிகளை அதிகரிக்க முனைந்துள்ளது. அத்தகைய திட்டங்களில் இன்று புதிய விவசாயக் கொடுகடன் திட்டமும், அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக்கொடுகடன் திட்டமும் முக்கிய இடம் பெறுகின்றன. விவசாயக் கொடுகடன்களை வழங்குமாறு அரசாங்கம் வணிக வங்கிகளை ஊக்குவித்ததால் இலங்கையில் அதிக கிளைகளுடன் இயங்கும் இலங்கைவங்கியும், மக்கள் வங்கியும், முன்னர் கிராமியக் கொடுகடன் விடயத்தில் கூட்டுறவுத்துறை வகித்த முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளன. அதிகமான பயிர்கள் குறித்தும் தற்போது கடன்வசதிகள் விரிவாக்கப்பட்டுள்ளன. இவற்றினைவிடக் குறிப்பிட்ட தேவைகளுக்காக அரசாங்கத் திணைக்களங்களாலும், சிறப்புக் கொடுகடன் நிறுவனங்களால் இயக்கப்படும் திட்டங்களினாலும் விவ

சாயிகளுக்குக் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனல் இன்று கிராமியக் கொடுகடனில் நிறுவன ரீதியான மூலாதாரங்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன; இது ஒரு வரவேற்கத்தக்க அமிசமாகும்.

## பகுதி111

இலங்கை வங்கியினுலும் மக்கள் வங்கியினுலும் புதிய விவசாயக் கொடுகடன் திட்டத்தின் கீழும், அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழும் உபஉணவுப் பயிர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் பற்றி இப்பகுதி ஆராய்கிறது. உபஉணவுப் பொருட்கள் என்ற வகையில் மக்கள் வங்கியும் இலங்கைவங்கியும் மிளகாய், சின்னவெங்காயம், உருளைக்கிழங்கு, நிலக்கடலை, சோளம், பம்பாய்வெங்காயம், காய்கறிகள் போன்றவற்றைப் பயிரிடுவோருக்குக் கடன் வழங்குகின்றன. அட்டவணை 3ஆனது மக்கள்வங்கியால் வழங்கப்பட்ட கடன்களையும் அட்டவணை 4ஆனது இலங்கைவங்கியினுல் வழங்கப்பட்ட கடன்களையும் காட்டி நிற்கின்றது. அட்டவணை 3இலும் 4இலும் குறிப்பிட்டுள்ள ஏனைய உபஉணவுப் பயிர்கள் என்பதற்குள் நிலக்கடலை, சோளம், பம்பாய்வெங்காயம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்கள் அடங்குகின்றன.

### அட்டவணை 3

**புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின் கீழும் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழும் மக்கள் வங்கியினுல் உபஉணவுப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் (ஆயிரம் ரூபாவில்)**

| ஆண்டு | மிளகாய் | சின்ன வெங்காயம் | உருளைக் கிழங்கு | காய் கறிகள் | ஏனைய உபஉணவுப் பயிர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1967/68 | 1,944 | 1,963 | 1,145 | 412 | — | 5,464 |
| 68/69 | 2,068 | 2,457 | 1,501 | 435 | — | 6,461 |
| 69/70 | 2,354 | 3,007 | 1,836 | 311 | 06 | 7,514 |
| 70/71 | 1,202 | 1,602 | 2,214 | 149 | 07 | 5,174 |
| 71/72 | 2,004 | 2,913 | 4,230 | 266 | — | 9,413 |
| 72/73 | 3,675 | 1,886 | 4,407 | 141 | 27 | 10,136 |
| 73/74 | 11,047 | 6,141 | 6,991 | 169 | 358 | 24,606 |
| 74/75 | 6,629 | 5,915 | 5,961 | 325 | 154 | 18,984 |
| 75/76 | 2,624 | 2,733 | 5,423 | 89 | — | 10,899 |
| 76/77 | 2,955 | 2,085 | 9,217 | 150 | 404 | 14,811 |
| 77/78 | 14,316 | 10,673 | 13,662 | 139 | 273 | 39,063 |
| 78/79 | 127 | 185 | 6,860 | 181 | 47 | 7,400 |
| 79/80 | 987 | 326 | 6,588 | 254 | 41 | 8,196 |

மூலம்: மக்கள் வங்கி

## அட்டவணை 4

### புதிய வேளாண்மைக் கொடுகடன் திட்டத்தின் கீழும் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழும் இலங்கை வங்கியினால் உபஉணவுப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் (ஆயிரம் ரூபாவில்)

| ஆண்டு | மிளகாய் | சின்ன வெங்காயம் | உருளைக் கிழங்கு | காய்கறிகள் | ஏனைய உபஉணவுப் பயிர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1973 | 36 | – | – | – | – | 36 |
| 1974 | 175 | 93 | 28 | – | 136 | 432 |
| 1975 | 2,594 | 1,736 | 612 | – | 970 | 5,912 |
| 1976 | 5,760 | 10,231 | 1,823 | 420 | 2,042 | 20,276 |
| 1977 | 13,006 | 8,754 | 4,032 | 536 | 4,151 | 30,479 |
| 1978 | 16,004 | 10,019 | 5,094 | 819 | 1,255 | 33,331 |
| 1979 | 1,495 | 1,128 | 7,832 | 906 | 328 | 11,689 |
| 1980 | 2,843 | 1,151 | 5,388 | 1,388 | 812 | 11,582 |

மூலம்: இலங்கைவங்கி

அட்டவணை 3இனை நோக்கும்போது மக்கள் வங்கியால் உபஉணவுப் பயிர்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள் 1970/71ஆம் ஆண்டில் காணப்பட்ட சிறிதளவான வீழ்ச்சியைத் தவிர மொத்தரீதியாக 1973/74வரை அதிகரித்தே வந்துள்ளது. 1972/73ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வழங்கப்பட்ட கடன்தொகையிலும் பார்க்க 1973/74ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வழங்கப்பட்ட கடன் தொகையானது இருமடங்குக்கும் மேலானதாகக் காணப்படுகின்றது. இவ்வாறு கடனின் அளவு கூடுதலாக அமைந்தமைக்குக் காரணம் உபஉணவுப் பயிர்கள் பயிரிடப்படும் நிலப்பரப்பு அதிகரித்தமை, 1973ஆம் ஆண்டில் ஒவ்வொரு பயிருக்கும் வழங்கப்படும் கடனின் உச்சஎல்லை உயர்த்தப்பட்டமை, பெற்றகடனைத் திருப்பிக் கொடுக்கத் தவறியவர்கள் மீண்டும் கடன்பெறும் தகுதி பெற்றமை, உணவு உற்பத்தி இயக்கம் வற்புறுத்தப்பட்டதன் காரணமாகக் கடன் பெறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தமை முதலியவையாகும். பின்னர் அடுத்த இரு காலப்பகுதியிலும் மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட கடனின் அளவு பெருமளவு குறைவதைக் காணலாம். பெற்ற கடன்களைத் திருப்பிக் கொடுக்காமல் விட்டதால் விவசாயிகள் பலர் மீண்டும் கடன்பெறும் தகுதியை இழந்திருந்தமையே இதற்குக் காரணமாகும். பின்னர் 1977/78ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் வழங்கப்பட்ட கடனானது முன்னெக்காலத்திலும் வழங்கப்படாத பெருந்தொகையாகக் காணப்படுகிறது. இவ்வாறு உபஉணவுப்பயிர்களுக்கான கடன் அதிகரித்தமைக்கு 1977இல் பதவிக்கு வந்த புதிய அரசாங்கத்தினது நடவடிக்கையே காரணமாகும். இது பற்றி 1977ஆம் ஆண்டு மத்தியவங்கி அறிக்கை பின்வருமாறு கூறுகிறது.

''1977 ஒகஸ்டில் கடன் வழங்கும்முறை எளிதாக்கப்பட்டமையே இப்போகத்தில் அதிக கடன் வழங்கப்பட்டமைக்குப் பெரும் காரணமாக இருந்தது. இப்பருவத்தில் வானிலை சாதகமாக இருந்தமையால் முன்பு கடனைத் திருப்பித்தரத் தவறியோருக்கும் கடன் வழங்குமாறு மக்கள் வங்கியையும், இலங்கை வங்கியையும் அரசாங்கம் பணித்தது. இலங்கை வங்கியுடனான விண்ணப்பங்களில் பயிர்ச்செய்கைக்கான நிலஉடமையின் வேளாண்மை அறிமுக அட்டை ஆவணமாகச் சமர்ப்பிக்க வேண்டிய தேவை ஒழிக்கப்பட்டது. மக்கள் வங்கியில் கடன் பெறுவதற்கு ஆகக்குறைந்தது ஒரு வருடத்திற்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தவராக இருக்க வேண்டும் என்ற மிகக் குறைந்த காலத் தேவையும் இடை நிறுத்தப்பட்டது. கடன்பெறுவதற்குத் தகுதியாவதற்கு விவசாயிகள் பயிர்செய்வதற்கான நிலத்தை வைத்திருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்ற கிராம மட்டத்திலான சான்றுப் பத்திரங்களை மட்டும் சமர்ப்பிக்க வேண்டி இருந்தது.''

எனவே கடன் பெறுவதற்குத் தேவையான வழிவகைகள் யாவும் இலகுவாக்கப் பட்டதனால் பலரும் கடன்பெறக் கூடியதாக இருந்தனர். முன்பு பெற்றகடனைச் செலுத்தாதவர்களுக்கும் கடன்வழங்குமாறு அரசாங்கம் வங்கிகளைக் கேட்டுக்கொண்டதனால் கடன் பெறுவோர் தொகை அதிகரிக்கக் கடன்தொகை அதிகரித்தது. ஆனால் பின்னர் பெற்றகடனைத் திருப்பிச் செலுத்தியவர்களின் தொகை குறைய குறிப்பாக மிளகாய், வெங்காயத்திற்கான கடனைப்பெற்றவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதனால் 1978/79ஆம் ஆண்டு இவ்விரு பயிர்கள் பொறுத்தும் மக்கள்வங்கியால் வழங்கப்பட்ட கடனின் அளவானது என்றுமில்லாத அளவிற்கு மிகக்குறைந்த தொகையாக அமைந்தது. கடனைமீளப் பெறுதல் என்பதே வங்கிகள் விவசாயக் கடன் பொறுத்து இன்று எதிர் நோக்குகின்ற முக்கிய பிரச்சனையாகும்.

இலங்கைவங்கி 1973ஆம் ஆண்டு தொடக்கமே உள்நாட்டு விவசாயத் துறைக்குக் கடன் வழங்கத் தொடங்கியது. இலங்கை வங்கியானது சில பிரதான கிளைகளூடாகவும், கமத்தொழில் சேவை நிலையங்களில் உள்ள உபஅலுவலகங்கள் மூலமாகவும் கடனை வழங்குகிறது. 1973ஆம் ஆண்டின் பின்னரேயே இலங்கைவங்கி இலங்கையின் பலபாகங்களிலும் உப அலுவலகங்களை அமைக்கத்தொடங்கியது. இதனால் காலப்போக்கில் உப அலுவலகங்களின் தொகை அதிகரிக்க வழங்கப்படும் கடனின் தொகையும் அதிகரித்தது. இதனால்தான் கடனின் தொகை 1978ஆம் ஆண்டு வரை தொடர்ந்து விரைவாக அதிகரித்தது. 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தின் பின் கடன் வழங்கும் தகுதி விதிகள் தளர்த்தப்பட்டதனால் 1977இலும் 1978இலும் வழங்கப்பட்ட கடன்கள் கூடுதலாக அமைந்தன. பின்னர் பெற்ற கடனைப் பல விவசாயிகள் திருப்பிச் செலுத்தாமையால் கடன்பெறும் தகுதி இழக்கப்பட்டதால் அடுத்த காலப்பகுதிகளில் வழங்கப்பட்ட கடனின் அளவானது குறைந்தது.

உபஉணவுப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களில் பெரும் பகுதியை மிளகாய், சின்னவெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிய மூன்று பயிர்களுமே

பெற்றுக்கொள்கின்றன. 1980 ஆம் ஆண்டுவரை இரு பிரதான வங்கிகளாலும் உபஉணவுப் பயிர்களுக்காக வழங்கப்பட்ட கடன்களில் இம் மூன்று பயிர்களும் 93% தைப் பெற்றன. தனியே மக்கள் வங்கியை எடுத்து நோக்கும்போது மேற்கூறிய விகிதமானது, 98% மாகவும் இலங்கை வங்கியைப் பொறுத்து இவ்விகிதம் 88% மாகவும் உள்ளது. 1967/68 ஆம் ஆண்டு தொடக்கம் 1979/80 ஆம் ஆண்டுவரை மக்கள் வங்கியால் உபஉணவுப் பயிர்களுக்காக வழங்கப்பட்ட கடன்களில் 31 விதமான கடன்கள் மிளகாய்க்கும், 25 விதமான கடன்கள் சின்ன வெங்காயத்திற்கும், 42 வீதமான கடன்கள் உருளைக் கிழங்கிற்கும் சென்றுள்ளன. 1973 ஆம் ஆண்டு தொடக்கம் 1980 ஆம் ஆண்டு வரை இலங்கை வங்கியால் உபஉணவுப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களில் 37 வீதமான கடன்கள் மிளகாய்க்கும், 29 வீதமான கடன்கள் சின்னவெங்காயத்திற்கும், 22 வீதமான கடன்கள் உருளைக்கிழங்குக்கும் சென்றுள்ளன. மக்கள் வங்கியால் உபஉணவுப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களைக் கூர்ந்து கவனிக்கையில் பெரும்பாலான காலங்களில் ஏனைய பயிர்கள் பெற்ற கடன்களிலும் உருளைக்கிழங்குச் செய்கைக்கே கூடுதலான அளவு கடன் வழங்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. 1978/79 ஆம், 1979/80 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் மக்கள் வங்கியாலும் இலங்கை வங்கியாலும் உபஉணவுப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களில் பெரும்பகுதி உருளைக் கிழங்குச் செய்கைக்கே சென்றுள்ளது. உருளைக்கிழங்குச் செய்கைக்கான கடனைப் பெற்ற விவசாயிகள் பலர் கடனைத் திருப்பிச் செலுத்தியமையாலேயே இந்நிலை ஏற்பட்டதெனலாம். மிளகாய், சின்னவெங்காயம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களில் சில காலங்களுக்குப் பாரிய ஏற்ற இறக்கங்கள் காணப்பட உருளைக்கிழங்குக்கு வழங்கப்படும் கடன் தொகையில் அத்தகைய ஏற்ற இறக்கங்கள் குறைவாக இருப்பதையே அட்டவணைகள் 3 உம், 4 உம் காட்டிநிற்கின்றன. இரு பிரதான வங்கிகளும் மொத்தமாக உபஉணவுப் பயிர்ச் செய்கைக்காக வழங்குகின்ற கடன் தொகையினை நோக்குகின்றபோது விவசாயக் கொடுகடன் வழங்கலில் இலங்கை வங்கியானது மக்கள் வங்கிக்குப் பின்னரேயே ஈடுபட்டபோதும் 1976 ஆம் ஆண்டின் பின்னர் ஒவ்வொரு வருடமும் மக்கள் வங்கியிலும் பார்க்க இலங்கை வங்கியே பெருமளவு கடனை வழங்குகின்றது என்பதை அறிய முடிகிறது.

உபஉணவுப் பயிர்களுக்காக வழங்கப்பட்ட கடன்கள் பற்றிக் குறிப்பிடும்போது சிறப்பாக யாழ்ப்பாண மாவட்டம் பற்றிக் குறிப்பிடுதல், அவசியமானதாக அமைகிறது. ஏனெனில் உபஉணவுப் பயிர்களுக்காக குறிப்பாக மிளகாய், சின்னவெங்காயம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களில் பெரும் பகுதியை யாழ்ப்பாண மாவட்ட விவசாயிகளே பெற்றுக் கொண்டனர் என்பதாலாகும். இதனை 1970 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் ''உபஉணவுப் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்களில் அதிகளவு பங்கினை யாழ்ப்பாண மாவட்டமே பெற்று வந்துள்ளது'' என்றும் 1971 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் ''உபஉணவுப் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்

பட்ட கடன்களில் அதிக அளவு பங்கினை யாழ்ப்பாண மாவட்டமே தொடர்ந்து பெற்றுள்ளது'' என்றும் 1974 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் ''சென்ற ஆண்டினைப்போலவே மிளகாய்க்கான (41.55 சதவீதம்) கடனிலும் வெங்காயத்திற்கான (66.5 சதவீதம்) கடனிலும் பெரும்பகுதி யாழ்ப்பாண மாவட்டத்திற்கே சென்றுள்ளது'' என்றும் 1976 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் ''சென்ற ஆண்டினைப் போலவே மிளகாய்க்கான (88.7 சதவீதம்) கடனிலும் வெங்காயத்திற்கான (99.0 சதவீதம்) கடனிலும் பெரும்பகுதி யாழ்ப்பாண மாவட்டத்திற்குச் சென்றுள்ளது'' என்றும் குறிப்பிடப்படுவதில் இருந்து அறிந்து கொள்ளலாம். 1978/79 ஆம் ஆண்டு மிளகாய்ச் செய்கைக்கு மக்கள் வங்கி வழங்கிய கடனே இதுவரை காலமும் யாழ்ப்பாண மாவட்டம் மிளகாய்ச் செய்கைக்காகப் பெற்ற கடன்களில் மிகக் குறைந்தளவு கடனாகும். அதன் தொகை 87,000 ரூபாய்களாகும். அந்நிலையில் கூட இலங்கை முழுவதற்குமாக மிளகாய்ச் செய்கைக்கு மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட கடனின் ஏறக்குறைய பத்தில் ஏழு பங்கை யாழ்ப்பாண மாவட்டமே பெற்றுள்ளது. மக்கள் வங்கியால் 1978/79 ஆம் ஆண்டு வெங்காயச் செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்முழுவதும் யாழ்ப்பாண மாவட்டத்திற்கே சென்றமை குறிப்பிடத்தக்கது. வெங்காயம், மிளகாய் பொறுத்து வழங்கப்பட்ட கடனில் பெரும்பகுதியை யாழ்ப்பாணமாவட்ட விவசாயிகள் பெறக்காரணம் இலங்கையில் உள்ள மாவட்டங்கள் ரீதியாக நோக்குகின்றபோது மிளகாய், வெங்காயம் ஆகியன பயிரிடுகின்ற நிலப்பரப்பும், விவசாயிகளின் தொகையும் ஒப்பீட்டு ரீதியில் ஏனைய மாவட்டங்களை விடயாழ்ப்பாண மாவட்டத்தில் கூடுதலாக இருப்பதாகும்.

சுருங்கக் கூறின் உபஉணவுப் பயிர்ச் செய்கைக்கான கடன் வழங்குவதில் புதிய விவசாயக் கொடுகடன் திட்டமும் அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் திட்டமும் முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்விரு திட்டங்களின் கீழும் இலங்கை வங்கியும், மக்கள்வங்கியும் கடன் வழங்குகின்றன. இலங்கை வங்கி மக்கள்வங்கிக்குப் பின்னரேயே உபஉணவுப் பயிர்ச் செய்கைக்கான கடன்வழங்குவதில் ஈடுபட்ட போதும் இன்று அதன் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. கொடுகடன் வழங்கும் விதிகள் தளர்த்தப்பட்ட காலத்தில் அதிகளவு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. மிளகாய், வெங்காயம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களில் பெரும்பகுதியை யாழ்ப்பாண மாவட்டமே பெற்றுள்ளது. கொடுகடன் வழங்கல் தொகையானது சீரில்லாமல் இருப்பதற்கு முக்கியகாரணம் விவசாயிகள் பலர் பெற்றகடன்களைத் திருப்பிச் செலுத்துவதில்லை என்பதாகும். இதுவே கடன்களை வழங்குகின்ற நிறுவனங்கள் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினையாக உள்ளது. இதனைப்பற்றி ஆராய்வதாகவே அடுத்த பகுதி அமைகிறது.

## பகுதி 4

விவசாயிகளுக்கான நிறுவன ரீதியான கொடுகடன் வழங்கலில் முன்னரிலும் பார்க்க முன்னேற்றங்கள் கடனின் அளவு, கடன்வசதித் தன்மை,

அதிகமான அளவு பயிர்களுக்கு கடன்வழங்குகின்ற நிலை போன்ற பல்வேறு விடயங்களில் ஏற்பட்டிருக்கின்றபோதும் அத்தகைய முன்னேற்றங்களுக்கு எதிராக வழங்கிய கடன்களில் பெரும்பகுதியை மீளப்பெற்றுக் கொள்ளுதல் என்பது தற்போதுள்ள முக்கிய பிரச்சனையாக அமைந்துள்ளது. எமது நாட்டில் உற்பத்தியினை அதிகரிப்பதற்காக விவசாயக் கடன்களை அரசாங்கம் இலகுவாக்குவதற்கும், அதனால் ஏற்படும் பிரச்சனைகளுக்கும் இடையேயான தொடர்புகளைப் பின்வரும் கூற்றுக்கள் தெளிவாக விளக்கி நிற்கின்றன.

''கடன் திட்டங்களை விஸ்தரித்து விவசாயிகள் இலகுவில் கடன்பெற வகை செய்தல், அவ்வாறான வசதிகளைப் பயன்படுத்திக் கடன் பெற்றவர்களில் பெரும்பாலானோர் அடுத்தடுத்து வரும் போகங்களில் கடன் மீளச் செலுத்தாதுவிடல், அதன்காரணமாக வழங்கப்படும் தொகைகுறைதல், அதன் விளைவாகக் கடன்பெறத் தகுதி உள்ளோரின் எண்ணிக்கை குறைதல் என்பன இப்போதெல்லாம் ஒருசுற்று வட்ட நிகழ்ச்சியாக அமைந்துவிட்டன. உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்குடன் இலகுமுறைக் கடன்களை வழங்குவது என்ற குறிக்கோளும், மீளச் செலுத்தாதவர்களை அவர்களுக்கு மீண்டும் கடன்கொடுக்காது விட்டுத் தண்டிக்க வேண்டும் என்ற குறிக்கோளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டனவாக மாறி விடுகின்றன''. (Economic Review Aptil, M.y 1979, People's Bank, Publication)

மேலே உள்ள கூற்றானது உபஉணவுப் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்களைப் பொறுத்தும் பொருத்தமானதாக அமைகிறது. மக்கள் வங்கி மிளகாய், சின்ன வெங்காயம் போன்றவற்றிற்கு வழங்கிய கடன் தொகையானது கடன்விதிகள் தளர்த்தப்பட்ட காலங்களாகிய 1973/74, 1977/78 ஆகிய காலப்பகுதிகளில் பெருந்தொகையாக இருப்பதுடன் பின்னர் அடுத்துவந்த காலப்பகுதிகளில் இத்தொகை குறைவடைவதைக் காணலாம். இலங்கைவங்கியால் மிளகாய், வெங்காயத்திற்காக வழங்கப்பட்ட கடன்கள் 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் கடன்விதிகள் தளர்த்தப்பட 1977ஆம், 1978ஆம் ஆண்டுகளில் கூடுதலாகக் காணப்பட்டதையும் பின்னர் குறைவடைவதையும் காணலாம் இவ்வாறு குறைவடைவதற்குக் காரணம் கடனைப்பெற்ற விவசாயிகள் அதனைத் திருப்பிச் செலுத்தாமல் விடுவதால் அடுத்த போகத்திற்குக் கடன்பெறும் தகுதியை இழந்து விடுகின்றனர் என்பதாகும். அட்டவணை 5ஆனது மக்கள்வங்கி மிளகாய், சின்னவெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களில் திரும்பச் செலுத்தாத பகுதியை தொகைரீதியிலும் வீதாசார ரீதியிலும் காட்டிநிற்கிறது.

## அட்டவணை 5

**மக்கள் வங்கியால் மிளகாய், சின்னவெங்காயம் உருளைக்கிழங்கு ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்களில் திரும்பிவரத் தவறியவை (நூறு ரூபாய்களில்)**

| | மிளகாய் | | சின்னவெங்காயம் | | உருளைக்கிழங்கு | |
|---|---|---|---|---|---|---|
| ஆண்டு | பெற்ற கடனின் தொகை | திரும்பச் செலுத்திய வீதம் | பெற்ற கடனின் தொகை | திரும்பச் செலுத்திய வீதம் | பெற்ற கடனின் தொகை | திரும்பச் செலுத்திய வீதம் |
| 1967/68 | 11,715 | 59.6 | 19,229 | 96.3 | 10,624 | 88.2 |
| 68/69 | 11,830 | 57.9 | 23,552 | 95.3 | 12,343 | 88.2 |
| 69/70 | 10,113 | 42.3 | 18,193 | 61.5 | 12,189 | 72.4 |
| 70/71 | 6,275 | 54.5 | 8,655 | 53.8 | 16,705 | 74.6 |
| 71/72 | 914 | 13.0 | 502 | 3.4 | 18,580 | 75.8 |
| 72/73 | 11,894 | 32.6 | 7,505 | 39.4 | 25,091 | 56.9 |
| 73/74 | 2,905 | 27.0 | 1,990 | 30.8 | 5,306 | 81.3 |
| 74/75 | 1,838 | 32.4 | 2,166 | 37.2 | 3,253 | 51.8 |
| 75/76 | 9,920 | 37.0 | 9,470 | 35.3 | 39,820 | 75.0 |
| 76/77 | 9,610 | 33.0 | 5,650 | 27.3 | 66,550 | 75.8 |
| 77/78 | 37,670 | 26.7 | 16,660 | 15.6 | 91,810 | 67.2 |
| 78/79 | 400 | 32.3 | — | — | 25,590 | 34.2 |

மூலம்: கிராமியக் கொடுகடன்துறை, மக்கள்வங்கி

*மக்கள் வங்கியால் உபஉணவுப்பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களில் 98வீதமான கடன்கள் மிளகாய், சின்னவெங்காயம், உருளைக்கிழங்கு ஆகிய மூன்றுக்குமே வழங்கப்பட்டதால், அப்பயிர்களுக்காகப் பெற்றகடனில் திரும்பச்செலுத்தாத பகுதியை ஆராய்வதன் மூலம் மக்கள் வங்கியால் உபஉணவுப்பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களில் திரும்பிவரத் தவறிய நிலையை அறிந்து கொள்ளலாம். அட்டவணை 5 இலிருந்து கடனைக் திருப்பிச் செலுத்துவதில் நாம் சிலபோக்குகளை அறியலாம். மிளகாய், சின்ன வெங்காயத்திற்காக வழங்கப்பட்ட கடன்களில் திருப்பிச் செலுத்தப்படும் அளவு ஆரம்பகாலத்தில் கூடுதலாக இருந்திருப்பதையும் பின்னர் குறிப்பாக 1972/73ஆம் ஆண்டுக் காலப்பகுதியின்பின் திருப்பிச் செலுத்தப்படும் அளவு குறைவாக இருப்பதையும் அவதானிக்க முடிகிறது. 1971/72 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட கடன்களில் மிளகாயைப் பொறுத்த வரையில் திருப்பிச் செலுத்தப்பட்ட அளவு வழங்கப்பட்ட கடன்களில் 13.0 வீதமாகவும், சின்ன வெங்காயத்தைப் பொறுத்தளவில் 3.4 வீதமாகவும் அமைகிறது இக்காலப்பகுதிதான் வழங்கிய கடன்களில் மிகவும் குறைந்தளவு பகுதி திரும்பச் செலுத்தப்பட்ட காலமாக அமைகிறது.*

உருளைக்கிழங்கைப் பொறுத்தவரையில் மற்றைய இருபயிர்களுடன் ஒப்பிடும் போது வழங்கப்பட்ட கடனில் திரும்பச் செலுத்தப்படும் பகுதி கூடுத லாக உள்ளது. 1978/79 ஆம் ஆண்டுக் காலப்பகுதியைத் தவிர ஏனைய காலங்களில் எல்லாம் உருளைக்கிழங்குச் செய்கைக்காக வழங்கப்பட்ட கட னில் அரைப்பகுதிக்கு மேற்பட்ட கடன்கள் திருப்பிச் செலுத்தப்பட்டுள் ளன. மொத்தமாக நோக்குகின்றபோது 1967/68க்கும் 1978/79 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் மக்கள் வங்கியால் மிளகாய்ச் செய்கைக் காக வழங்கப்பட்ட கடனில் 23வீதமும், உருளைக்கிழங்கு உற்பத்திக்காக வழங்கப்பட்ட கடனில் 51 வீதமும் மீளப்பெறப்பட்டுள்ளது. 1967/68க்கும் 1977/78க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சின்ன வெங்காயத்திற்காக வழங்கப்பட்ட கடன்களில் 28 வீதமான கடன்களே திரும்பப் பெறப் பட்டு உள்ளன. உருளைக்கிழங்குக்கான கடனானது குறிப்பாக நுவரெலியா மாவட்டம், கண்டி மாவட்டம், பதுளை மாவட்டம், யாழ்ப்பாண மாவட் டம் ஆகிய பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்கே மக்கள்வங்கியால் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வந்துள்ளது. 1967/68ஆம் ஆண்டில் மட் டும் உருளைக்கிழங்குச் செய்கைக்காக வவுனியா மாவட்ட விவசாயிகளுக்குக் கடன் வழங்கப்பட்டது. அதன் தொகை 1000 ரூபாய்கள் மட்டுமே. எண்ணிக்கை ரீதியாக நோக்குகின்றபோது உருளைக்கிழங்குக்கான கட னைப் பெறுபவர்களின் தொகையானது, ஏனைய பயிர்களுக்கான கடன்களைப் பெறுபவர்களிலும் பார்க்கக் குறைந்தளவினதாக இருப்பதும் இவர்களில் கணிசமான பகுதியினர் பெற்றகடனைத் திரும்பச் செலுத்தி விடுவதும் தான் உருளைக்கிழங்குக்குரிய கடனில் மீளப்பெறும் விகிதம் உயர்வாக இருப்பதற்குக் காரணம் எனலாம்.

மக்கள்வங்கியினுல் வழங்கப்பட்ட கடன்களில் பெரும்பகுதி திருப்பிச் செலுத்தப்படாமல் இருப்பது போலவே இலங்கை வங்கியினுல் வழங்கப் பட்ட கடன்களில் பெரும்பகுதியும் மீளப்பெறப்படாமல் உள்ளது. 1973ஆம் ஆண்டு தொடக்கம் 1980ஆம் ஆண்டு வரை இலங்கை வங்கியினுல் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, காய்கறிகள், நிலக்கடலை, சோளம், கரும்பு, பருத்தி ஆகியவற்றிற்காக வழங்கப்பட்ட கடனின் மொத்தத்தொகை 160,468,000 ரூபா ஆகும். இதில் திரும்பச் செலுத்தப்பட்ட தொகை 49,664,000 ரூபாய்களாகும். அதாவது வழங்கப்பட்ட கடனில் மீளப் பெறப்பட்ட தொகை 30.9 வீதமாகும். சுருங்கக்கூறின் இலங்கை வங்கி யால் உபஉணவுப் பயிர்களுக்கும் கரும்பு, பருத்தி போன்றவற்றிற்கும் வழங்கப்பட்ட கடன் தொகையில் பத்தில் ஏழு பகுதி திரும்பப் பெறப்பட வில்லை. ஆனுல் மக்கள் வங்கியால் 1967/68க்கும், 1980/81க்கும் இடைப் பட்ட காலத்தில் மேற்குறிப்பிட்ட பயிர்களுக்காக வழங்கப்பட்ட கடனில் திரும்பப் பெறப்பட்ட விகிதம் 61.7 வீதமாகும். அதாவது ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதிக்கடன்களே மக்கள் வங்கியால் திரும்பப் பெறப்பட வில்லை. மக்கள் வங்கியிலும் பார்க்க இலங்கை வங்கியானது விவசாயக் கொடுகடன் வழங்கலில் பத்து வருடங்கள் பிந்தியே ஈடுபட்ட போதிலும் வழங்கிய கடன்களைத் திரும்பப் பெறுவதில் மக்கள் வங்கியை விட இலங்கை வங்கி அதிக சிரமத்தை ஏற்கின்றது. அதிகளவு திரும்பச் செலுத்தாத கடன் கள் இருப்பது நிறுவன ரீதியான மூலாதாரங்கள் தொடர்ந்தும் விவசாயக்

கடன்களை வழங்குவதைத் தடை செய்யக் காரணமாக அமைகிறது. இந் நிலையை நீக்குதல் அவசியமானதாகும். இதற்குக் கடன்களைத் திரும்பிச் செலுத்தப்படாமைக்குரிய காரணங்களைத் தெளிவாக ஆராய்தல் வேண்டும்.

விவசாயக் கடன்களைப் பெற்ற விவசாயிகள் ஏன் அக்கடன்களைத் திரும்பவும் செலுத்தாது விடுகிறார்கள் என்பதற்கான ஆய்வுகள் இலங்கையில் தேசிய ரீதியாக அதிக அளவு நடாத்தப்படவில்லை. 1972ஆம் ஆண்டில் புதிய விவசாயக் கொடுகடன் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களில் திரும்பி வரத்தவறிய கடன்கள் பற்றிய ஆய்வொன்று மத்திய வங்கியினால் நடாத் தப்பட்டது. இவ்வாய்வின்படி பெறப்பட்ட முடிவுகளில் கடனைத் திருப்பிச் செலுத்தாமைக்குப் பயிர் விளையாமை, குறைந்த வருமானம், திருப்பிக் கொடுப்பதற்கு மனமின்மை, நலமின்மை, இறப்பு, கூட்டுறவு அதிகாரிகளின் கவனமின்மை, கூட்டுறவின் ஊழல்கள் போன்றன முக்கிய காரணங்களாக அமைந்தன. இதனைவிடச் சமயசடங்குகளுக்காகச் செலவிட்டமை, வேறு பொருட்களைக் கொள்வனவுசெய்யக் கடன்களைப் பயன்படுத்தியமை போன்ற 17 காரணங்கள் கூறப்பட்டன. பெரும்பாலும் இவ்வாய்வு நெற்செய்கை யில் ஈடுபட்டோருடன்தான் தொடர்பு கொண்டிருந்தது. இதனால் உப உணவுப் பயிர்களுக்கான கடன்களைப் பெற்றவர்கள் அவற்றினை ஏன் திருப்பிச் செலுத்தவில்லை என்பதைப் புள்ளி விபர ரீதியான ஆதாரங்களுடன் விளக்க முடியாதுள்ளது. எனினும் அடுத்துக் கூறப்படும் சில பொதுவான காரணிகள் உபஉணவுப் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்படும் கடன்களில் பெரும்பகுதியைத் திரும்பச் செலுத்தாமல் விடுவதற்குப் பொறுப்பாக இருக் கும் எனத் துணிந்து கூறலாம்.

1972ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட ஆய்வில் கடனைத் திருப்பிச் செலுத் தாமல் இருப்பதற்கான காரணிகளில் முக்கியமானதாகப் பயிர் விளையாமை என்பதே அமைந்தது. உபஉணவுப் பயிர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் திருப்பிச் செலுத்தப்படாமல் இருப்பதற்கு பயிர் விளையாமை என்பது முக் கிய காரணியாக ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. 1974/75ஆம் ஆண்டில் வரட்சியின் காரணமாக மிளகாய்ச் செய்கை பாதிக்கப்பட்டது. 1979இல் வெங்காயப்பூழு நோயினால் வெங்காயச் செய்கையில் அழிவு ஏற்பட்டது. இவ்விரு காலங்களைத் தவிர 1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் உபஉணவுப் பயிர்கள் பொறுத்துப் பயிரழிவானது மிகக் குறைவாகவே இருந்தது. பயி ரழிவு நடைபெற்ற ஆண்டுகளில் மட்டுமல்ல; பயிரழிவு ஏற்படாத ஆண்டு களிற் கூட 1970ஆம் ஆண்டுக்குப் பின்னர் திருப்பிச் செலுத்தப்படாத கடன்களின் வீதம் அதிகரித்து வந்தது. எனவே பயிரழிவுதான் அல்லது பயிர் விளையாமைதான் பெற்ற கடன்களைத் திருப்பிச் செலுத்தாமைக்கு முக்கிய காரணமாக அமைகிறது என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

பெற்ற கடன்களை விவசாயிகள் திரும்பச் செலுத்தாமைக்குரிய கார ணங்களில் வருமானம் குறைவாக இருப்பதும் முக்கிய காரணமாகும். சிறிய நிலங்களில் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதும் (உபஉணவுப் பயிர்களான மிளகாய், சின்னவெங்காயம், உருளைக்கிழங்கு பயிரிடும் நில உடைமைகளில் பெரும்பாலானவை அரை ஏக்கருக்கு உட்பட்டவை.) அதனால் பெறும் வரு மானம் குறைவாக இருப்பதும் அவ்வருமானம் விவசாயிகளின் குடும்பச்

செலவுக்குப் போதாமல் இருப்பதனல் கடனைத் திரும்பச் செலுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. விவசாயிகளின் வருமானம் பெறும் அடித்தளம் பலவீனமாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.

பயிர்ச் செய்கைக்காகப் பெற்ற கடன்களைப் பிற தேவைகளுக்கும் விவசாயிகள் பயன்படுத்துவதாலும் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை ஏற்படுகிறது. மரணச் செலவு, சுகயீனம், சமய, சம்பிரதாய சடங்குச் செலவுகள் போன்றவற்றிற்கும் வானெலி, கடிகாரம், தையல் இயந்திரம் போன்ற நீடித்த காலப் பாவனையுடைய பொருட்களை வாங்குவதற்கும் பெற்ற கடன்களைச் சில விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். இதனல் கடனைப் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தித் திரும்பவும் வருமானம் பெற முடியாமல் இருப்பதால் கடனைத் திரும்பச் செலுத்த முடியாத நிலை ஏற்படுகிறது.

குறிப்பிட்ட விவசாயிகள் பெற்ற கடனைத் திரும்பச் செலுத்த மாட்டார்கள் என்பதை வங்கியாளர் சிலர் நன்கு தெரிந்திருந்தும் அத்தகைய விவசாயிகளுக்கும் கடன் விதிகள் தளர்த்கப்பட்ட காலத்தில் கடன் வழங்குவதனலும் திரும்பச் செலுத்தப்படாத கடனின் அளவு உயர்கிறது என்பதை இக்கட்டுரையாளருக்கு நேரடி ஆய்வொன்றின்போது அறியக்கூடியதாக இருந்தது. 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அரசாங்கம் விவசாயக் கொடுகடன் வழங்கலில் காணப்பட்ட இறுக்கமான விதிகளைத் தளர்த்தியபோது தாம் முன்னர் பெற்ற கடன்களைத் திரும்பச் செலுத்தாமல் இருந்தபோதும் கிராமிய வங்கிகள், மற்றும் விவசாய சேவை நிலையங்களில் இருந்த இலங்கை வங்கியின் உபஅலுவலகங்களில் வேலை செய்த அலுவலர்கள் தம்மை வலிய அழைத்து கடனுக்கு விண்ணப்பம் செய்யுமாறு கூறிக் கடன்கள் தந்ததாகவும் சில விவசாயிகளால் கட்டுரையாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. எனவே குறிப்பிட்ட விவசாயிகள், பெற்ற கடனைத் திரும்பச் செலுத்த மாட்டார்கள் என்பதை வங்கி அதிகாரிகள் அறிந்திருந்தும் அவர்களுக்கும் கடன் கொடுப்பதும் மீளப் பெருத கடன்களின் தொகையை அதிகரிக்கிறது.

விவசாயிகள் 1970ஆம் ஆண்டின் பின்பு கடனைத் திருப்பிச் செலுத்துவது குறைந்தமைக்கு அரசாங்க நடவடிக்கையும் ஒரு காரணமாகும். பெற்ற கடன்களைத் திரும்பச் செலுத்துவது குறையும்போது கடன்பெறத் தகுதியானவர்களும் குறையக் கடனின் அளவும் குறையும். பின்னர் அரசாங்கக் கட்டளையின் பேரில் கொடுகடன்கள் வழங்கும் விதிகள் தளர்த்தப்பட எல்லா விவசாயிகளும் கடன்பெறத் தகுதிபெறுவர். இதனை 1970இன் பின் அரசாங்கம் அடிக்கடி கையாண்டமை 1970ஆம் ஆண்டின் முன் ஒழுங்காகக் கடன்செலுத்திய விவசாயிகள் மனதில் கடன் திருப்பிக் கட்டவேண்டிய அவசியம் இல்லை என்ற எண்ணத்தை விதைத்துவிட்டது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். எல்லோரும் கடன்பெறத் தகுதியானவர்களாக அரசாங்க நடவடிக்கையின் காரணமாக மாறும்போது கடனை ஒழுங்காகக் கட்டிய விவசாயிகளைக் கடனை ஒழுங்காகக் கட்டாதவர்கள் ஏளனமாகப் பார்ப்பதும், கதைப்பதும் ஒழுங்காகக் கடனைச் செலுத்திவரும் விவசாயிக்கு அடுத்தபோகக் கடனைச் செலுத்தக் கூடாது

என்ற எண்ணத்தை ஏற்படுத்திவிடுகிறது. இன்னொருவகையில் கூறின் காலப்போக்கில் விவசாயக் கடனும் அரசாங்கத்தினுல் வழங்கப்படும் ஒருவகைச் சமூகசேவையே என்ற எண்ணம் விவசாயிகள் மத்தியில் வலுப்பெற்றுவிடுகிறது. எனவே அரசாங்க நடவடிக்கையும் கடனைத் திருப்பிச் செலுத்தப்படாமைக்குரிய முக்கிய காரணமாக விளங்குகிறது. இதனைப் பின்வருமாறு ஸ்ரீலங்கா ஓர் ஆய்வு என்ற நூலில் எல். ஏ. விக்கிரமரத்ன குறிப்பிடுகிருர்.

''பல்வேறுபட்ட சமூகநலத்திட்டங்களாலும் நன்மையடைந்து வரும் விவசாயி தன்சுகதுக்கங்களைக் கவனித்துக் கொள்ளல் அரசாங்கத்தின் கடமையென்று நினைக்கிருன். மறுவார்த்தைகளில் கூறுவதாயின் கடன்களும் பிறிதொரு சமூகநலவசதியாகக் கருதப்படுகின்றது. கடன்களை எழுதி அழித்துவிடுவதாக வாக்குறுதிஅளிக்கும் பொறுப்புமிக்க சில அரசியல்வாதிகளினுல் இக்கருத்துக்கள் மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றன.''

எனவே அரசாங்கம் இப்போக்கினைக் கைவிடுதல் வேண்டும். கடனைத் திருப்பிக்கட்டுதல் விவசாயிகளுக்கே நன்மை அளிக்கும் ஒரு விடயம் என்பதனை அவர்களுக்கு உணர்த்தவேண்டும். அதாவது இன்னொரு வகையில் கூறின் கடனைத் திருப்பிக் கட்டுவதற்கு விவசாயிகள் பலாத்காரமல்லாத வகையிலாவது தூண்டப்படுதல் வேண்டும்.

சுருங்கக் கூறின் உள்நாட்டு விவசாயத் துறையில் நெல்லுக்கு அடுத்தபடியாக உபஉணவுப் பயிர்களே முக்கியம் பெறுகின்றன. அதிகரித்து வரும் அந்நியசெலவாணி நெருக்கடியினைக் குறைப்பதற்கு உபஉணவுப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பது அவசியமானதாகும். அரசாங்கம் உபஉணவுப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பல தூண்டுதல்கள் அளித்திருக்கிறது. இன்று புதிய விவசாயக் கொடுகடன் திட்டத்தின்கீழும் அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தின் கீழும் உபஉணவுப் பயிர்ச்செய்கைக்காக இலங்கை வங்கியாலும் மக்கள்வங்கியாலும் கடன்கள் வழங்கப்படுகின்றன. வழங்கப்படும் கடன்தொகையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படுவதற்கு முக்கிய காரணம் பெற்றகடன்களில் பெரும்பகுதியை விவசாயிகள் மீளச்செலுத்தாது விடுதல் என்பதாகும். இந்நிலை நீடித்தால் நிறுவன ரீதியான மூலாதாரங்கள் விவசாயிகளுக்குக் கடன்வழங்குவதில் பல சிக்கல்கள் ஏற்படும். தகுந்த திட்டங்களைத் தயாரித்து வழங்கப்படுகின்ற கடன்முழுவதையும் மீளப்பெறச் செய்வதன் மூலம்தான் எதிர்காலத்தில் நிறுவன ரீதியான மூலாதாரங்கள் தொடர்ந்தும் சிறந்தமுறையில் விவசாயிகளுக்கு நிதி உதவியைச் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கும்.

—★—

## REFERENCES


1. Central Bank of Ceylon. Report of the Survey of the Rural Credit and Rural Indtedness 1969. Colombo, 1971.
2. Central Bank ot Ceylon. Survey of Rural Credit and Indebtedness among Paddy farmers 1976. Colombo, 1978.
3. Central Bank of Ceylon. Survey of Defaults in Repayment of New Agricultural Loans. Colombo, 1972.
4. Central Bank of Ceylon. Annual reports 1960 - 1980.
5. Central Bank of Ceylon. Economic Reviews 1975 - 1980.
6. Department of census and statistics. Survey of the Rural Indebtedness Ceylon 1957. Monograph 12. Colombo, 1959.
7. Goonetilake Susantha. Credit and other Government supports' for small farmers. People's Bank Research Department, Colombo.
8. Marga Institute. The Co - operative system and Rural Credit in Sri Lanka. Colombo, Marga Publications, 1974.
9. People's Bank Research Department. "Rural Credit and Peasant farmers; the experience of recent years" Economic Review vol4,5 No. 1&2, 1979.
10. Perinpanathan, N. Agriculture and Finance in the Jaffna District A case study of some selected crops - (Unpublished Diseratation in Tamil) 1979.
11. Sanderatne, Nimal. Institutionalising small farm credit; Performance and Problems in Sri Lanka. Central Bank. Staff Studies vol. 10 Nos 1&2 April/September 1980.
12. Sanderatne, Nimal. The Problems of Defaults in Sri Lanka's small farmer Loan Central Bank. Staff Studies vo. 1.7 No.1, April 1977.
13. Wickramaratne, L.A. "Peasant Agriculture" Sri Lanka - A Survey. A publication of the Institute of Asian Affairs, Hamburg, 1977.